## வழிகாட்டி

# உள்ளுக்குள் உள்ள சக்கரவர்த்தி!



ஆன்மிகத்தில் இருப்பது என்றால் உங்களுக்குள்ளேயே ஒரு சக்கரவர்த்தியாக இருப்பது என்று பொருள். இப்படித்தான் அது இருக்க முடியும். விழிப்புணர்வோடு உள்ள யாருக்கும் பிறரிடமிருந்தோ, மற்றவற்றிடமிருந்தோ, எதையாவது பெற வேண்டும் என்ற எண்ணம் இருக்காது. உங்களுக்குள்ளேயே எல்லாம் இருக்கிறபோது அதை நீங்கள் வெளியே தேட வேண்டியதில்லை. மற்றவர்களின் துணை கூட உங்களுக்குத் தேவையில்லை. இன்னொருவருக்கு அது தேவையென்றால் நீங்கள் தருகிறீர்கள். ஆனால் உங்களைப் பொறுத்தவரை யாருடைய துணையும் உங்களுக்குத் தேவையில்லை. அப்படியிருந்தால், உள்நிலையில் ஒரு பிச்சைக்காரராக இருப்பது இனிமேல் இல்லையென்று பொருள். வெளித் தேவைக்காக நீங்கள் வெளியுலகை நோக்கிச் செல்லலாம். இதுதான் முழுமையான சுதந்திரம்.

ஆன்மிகமென்பது பூனைகளுக்கானது அல்ல. வாழ்வில் வேறு எதையும் செய்ய முடியாதவர்கள் ஆன்மிகத்திற்கு வரலாம் என்று நினைக்காதீர்கள். இந்த உலகில் எதை வேண்டுமானாலும் செய்ய முடியும் என்றால், ஆன்மிகத்திற்கு நீங்கள் தகுதியானவராக இருக்கலாம். அதற்கான வலிமையும், துணிவும், உங்களுக்கு இருந்தால் நீங்கள் ஆன்மிகவாதியாக வாய்ப்பு உண்டு. இன்று உலகம் முழுக்க என்ன எண்ணமிருக்கிறது என்றால், வேறு எதற்கும் தகுதி இல்லாதவர்கள் ஆன்மிகத்திற்குப் போகிறார்கள் என்று கருதுகிறார்கள். ஏனென்றால் தங்களை ஆன்மிகவாதியாக சொல்லிக் கொள்கிறவர்கள் சிலர் அப்படித்தான் இருக்கிறார்கள். வாழ்வில் வேறு எதையும் செய்ய முடியாமல், வாழ்வின் ஏற்ற இறக்கங்களைத் தாங்க முடியாமல் இருப்பவர்கள், ஒரு காவி உடையை அணிந்து கொண்டு ஒரு கோயிலின் வாயிலில் உட்கார்ந்து விட்டால் அங்கு அவருடைய வாழ்க்கை முடிந்து விடுகிறது. இதற்குப் பெயர் ஆன்மிகம் அல்ல. இது சீருடையை அணிந்து கொண்ட பிச்சைக்காரத்தனம். உங்கள் விழிப்புணர்வை நீங்கள்வெல்ல வேண்டுமேயானால், உங்கள் விழிப்புணர்வின் உச்சத்தில் நீங்கள் இருக்க வேண்டுமேயானால் ஒரு பிச்சைக்காரராக நீங்கள் இச்செயலில் ஈடுபடக் கூடாது.

இரண்டு விதமான பிச்சைக்காரர்கள் உண்டு. கௌதம புத்தரும், அவரைச் சார்ந்தவர்களும், மிக உயர்ந்த பிச்சைக்காரர்கள். மற்றவர்கள் சாதாரண பிச்சைக்காரர்கள். தெருவில் நடந்துபோகிற பிச்சைக்காரர்களும், அரியணையில் அமர்ந்திருக்கிற அரசரும் பிச்சைக்காரர்கள்தான். இருவரும் வெளியுலகில் இருந்து எதையாவது கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். பிச்சைக் காரருக்கு பணமும், உடையும், உணவும், இடமும் தேவையாக இருக்கின்றன. அவர்கள் ஏதோ ஒன்றை பிச்சை எடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள். கௌதமர் உணவை மட்டுமே பிச்சை எடுத்தார். மற்றவற்றில் எல்லாம் தன்னிறைவு பெற்றவராகவே இருந்தார். அவரைப் போன்றவர்கள் அந்த நிலையில் இருக்க, மற்றவர்கள் உணவை மட்டும் பிச்சை எடுப்பதில்லை. மற்ற அனைத்தையும் பிச்சை எடுக்கிறார்கள். வாழ்க்கை முழுவதும் இந்த பிச்சையிலேயே போகிறது. உணவை மட்டுமே அவரால் சம்பாதிக்க முடிகிறது. ஆனால் ஓர் ஆன்மிகவாதி உணவைத் தவிர மற்ற எல்லா வற்றையும் சம்பாதித்துக் கொள்கிறார். இரண்டில் எது சிறந்தது என்று நீங்கள் கருதுகிறீர்களோ, அந்த வழியில் வாழுங்கள்.

இந்த நிலைக்கு வருகிற போது ஒரு மனிதருடைய வாழ்க்கை வித்தியாசமானதாக மாறுகிறது. அவருக்கென்று தேவைகள் ஏதுமில்லை. ஏக்கங்கள் இல்லை. அப்போதுதான் அன்பு என்றால் என்ன என்பது தெரிகிறது. மகிழ்ச்சி என்றால் என்ன என்று தெரிகிறது. பகிர்ந்து கொள்ளுதல் என்றால் என்ன என்பது தெரிகிறது. பகிர்ந்து கொள்ளுதல் என்றால், 'இந்த நிலையில் நீங்கள் எனக்கு எதுவும் தரவேண்டிய தில்லை. எனக்கு உங்களிடமிருந்து எதுவும் வேண்டாம். ஆனால், என்னிடம் இருப்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்' என்கிற மனப்பான்மை. வாழ்க்கை முழுவதும் ஒப்பந்தங்களிலேயே கழிப்பது சிலருக்கு வசதியாக இருக்கலாம். ஆனால், அது பலவீனமானவர்களின் வழி. நீங்கள் சிவனை சந்திக்க வேண்டுமென்றால், இந்த பலவீனம் உங்களை விட்டுப்போக வேண்டும். அவரை சந்திக்க வேண்டுமென்றால் அவரது வழியில் நீங்கள் செல்வதே நல்லது. ஒரு சராசரி பிச்சைக்காரரை அவர் சந்திக்கப் போவதில்லை. அவரைச் சந்திக்க இரண்டே வழிகள் இருக்கின்றன. ஒன்று - அவருடைய விதிமுறைகளை அறிந்து பின்பற்றுதல், மற்றொன்று - பணிந்து போதல். ஞானம், பக்தி என்றால் இந்த இரண்டுதான். பக்தியில் நீங்கள் உங்களையே பூஜ்யமாகிக் கொள்கிறீர்கள். அப்போது அவரைக் காண்கிறீர்கள். ஞான மார்க்கத்தில் அவரைக் காண விரும்பினால் நீங்களும் எல்லையற்ற தன்மையை அடைகிறீர்கள். இல்லையென்றால், சந்திப்பதற்கு வேறு வழியே கிடையாது.

ஞானத்தின் பாதையைக் காட்டிலும் பக்தியின் பாதை மிக எளியது போல் தோன்றும். ஆனால் நிறைய குழிகள் உண்டு. ஞானத்தின் பாதையில் போகிறபோது எங்கே போகிறீர்கள், எங்கே விழுகிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் பக்தியின் பாதையில் தெரியாது. ஒரு குழியில் விழுந்து விட்டால் விழுந்ததே தெரியாது.

ஞானத்தின் பாதை அப்படியில்லை. நீங்கள் எடுத்து வைக்கிற பாதை என்னவென்று உங்களுக்குத் தெரியும். அது ஒரு கடினமான பாதை என்று பொருளல்ல. ஆனால் துணிச்சல் உள்ளவர்கள் நடக்க வேண்டிய பாதை. பலவீனமானவர்களுக்கான பாதை அல்ல. பலவீனமானவர்கள் அதை எட்டப்போவ தில்லை. ஆனால் எல்லோருக்குமே அதற்கான சாத்தியங்கள் உண்டு. தங்கள் எல்லைகளைக் கடந்து யார் எழுகிறார்களோ அவர்களுக்குத் தான் இந்த சாத்தியங்கள் உண்டு. நீங்கள் என்னவாக எண்ணுகிறீர்களோ, அதுவாகவே மாறுகிறீர்கள். நீங்கள் எதை அதிக பட்ச தன்மையாக நினைக்கிறீர்களோ, அதை நோக்கி உங்கள் சக்திநிலை ஈர்க்கப்படுகிறது. ஆன்மிகப்பாதையில் நடக்க விரும்புகிற மனிதன், இருப்பதிலேயே உச்சக்கட்டமான ஒன்றையே விரும்புகிறான். என் வாழ்க்கையில் முதலும், கடைசியு மாக இதுதான், இது மட்டும்தான் வேண்டும் என்று உறுதியோடு இருக்கிறான். எனவே, மனிதனுடைய சக்திநிலை அதை நோக்கி ஆற்றுப்படுத்தப்படுகிறது. அந்த சூழலில் விநாடிக்கு விநாடி நடக்கிற போராட்டங்கள் மறைந்து விடுகின்றன. உங்களை சரிசெய்து கொள்ள போராட வேண்டிய அவசியமில்லை.

**- சத்குரு ஜகி வாசுதேவ்**

**குறிப்பு: சத்குரு ஜகிவாசுதேவ் தொடர்ந்து வழங்கி வந்த 'வழிகாட்டி' பகுதி இத்துடன் நிறைவுபெறுகிறது**

## வாழ்க்கை உங்கள் கையில்!

★ மக்களில் சிலர் சூழ்நிலைகளால் உருவாகிறார்கள். சிலர் தமக்கு தேவையான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொள்கிறார்கள். உங்களுக்கான சூழ்நிலைகளை நீங்களே உருவாக்கிக் கொள்வதில்தான் மனிதனின் முழு ஆற்றலும் திறமையும் அடங்கி உள்ளன.

★ ஆசை என்பது கவனமான உணர்வுகளின் வெளிப்பாடாக இருக்கும் வரை எந்தவிதமான பிரச்னையும் இல்லை. ஆனால், விழிப்புணர்வை நீங்கள் தொலைத்து விட்டால் ஆசை உங்களை அடிமைப்படுத்திவிடும்.

★ கடவுள் உங்கள் மீது அன்பு செலுத்துகிறார் என்பது முக்கியம் இல்லை. உங்களைச் சுற்றியுள்ளோர் வேறு வழியே இல்லாமல் உங்கள் மீது அன்பில் ஆழ்ந்து விடுகிறார்கள் என்றால் அதுதான் பெரிய விஷயம்.

★ உங்கள் வாழ்வின் அனுபவமே நீங்கள் வாழ்க்கையில் ஆழமாக ஈடுபடுவதில்தான் உள்ளது. ஆர்வத்துடன் செய்யும் செயல்கள் எப்போதும் ஆனந்தத்தை அள்ளித் தரும். ஆழமான ஈடுபாடு இல்லாவிட்டால் வாழ்க்கையின் அழகை அறிந்து கொள்ள முடியாது.

★ உங்கள் வாழ்க்கையில் அழகான சூழ்நிலைகள் வருகின்றன. கொடுமையான சூழ்நிலைகள் வருகின்றன. உங்களுக்கு இருக்கும் வாய்ப்பினை பயன்படுத்தி மேலும் சிறந்தவராக, வலிமையானவராக மாறவேண்டியதோ அல்லது உடைந்து நொறுங்கிப் போவதோ உங்கள் கையில்தான் இருக்கிறது.